செ.வெ.எண்: 450 <u>செய்தி வெளியீடு</u> நாள்: 17.06.2008

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு, 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 மற்றும் 20–ஆம் தேதிகளில் சென்னை தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகையின் பத்தாவது தளத்தில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் நடைபெற உள்ளது.

19.6.2008 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சரின் தலைமை உரையுடன் துவங்கி வைக்கப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் கூட்டு மாநாட்டில், சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்து, காவல்துறை தலைமை இயக்குநர், காவல்துறை கூடுதல் இயக்குநர்கள், மண்டல காவல்துறைத் தலைவர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோருடன் கருத்துரையாடல் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 20.6.2008 அன்று நடைபெறும் இரண்டாம் நாள் மாநாட்டில், வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோருடன் விவாதிக்கப்படவுள்ளது.

மாண்புமிகு அமைச்சர்கள், அரசுத் துறை செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

எல்.கே.திரிபாதி
தலைமை செயலாளர்

/உண்மை நகல்/

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

17/6/08
பிரிவு அலுவலர்.